**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**மார்ச் - 2026 மேல்நிலைப் பொதுத் தேர்வுகள்**

**விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்தல்**

**செய்திக்குறிப்பு**

மார்ச் 2026 மேல்நிலைப் பொதுத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் 05.06.2026 (**வெள்ளிக்கிழமை**) **பிற்பகல் முதல்** 16.06.2026 (**செவ்வாய்க்கிழமை**) **வரை** விடைத்தாள் நகலினை பாடவாரியாக பல்வேறு கட்டங்களாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் 12.06.2026 அன்று பிற்பகல் முதல் கீழ்காணும் பாடங்களின் விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| Subject code | Subject name |
|---|---|
| 503 | ENGLISH |
| 509 | BIOLOGY |
| 541 | MATHEMATICS |

05.06.2026, 06.06.2026, 08.06.2026. 09.06.2026, 10.06.2026 மற்றும் 11.06.2026 ஆகிய நாட்களில் பதிவிறக்கம் செய்ய அறிவிக்கப்பட்ட பாடங்களுக்கான விவரங்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் PRESS RELEASE என்ற வாசகத்தை click செய்து தெரிந்துகொள்ளலாம். மேலும், 12.06.2026 அன்று பிற்பகல் முதல் ஏற்கனவே வெளியிடப்பட்ட பாடங்கள் உள்ளிட்ட அனைத்து மேல்நிலைப் பொதுத்தேர்வு பாடங்களுக்கான விடைத்தாள் நகல்களை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்த பின்னர் மாணவர்கள் 16.06.2026 – **க்குள்** மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, தேர்வர்களின் நலன் கருதி இக்கால அவகாசம் 17.06.2026 (**புதன்கிழமை**) வரை நீட்டிக்கப்படுகிறது.

விடைத்தாள் நகல் பதிவிறக்கம் மற்றும் மறுகூட்டல்/ மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது தொடர்பான சந்தேகங்களுக்கு 9498383075 / 9498383076 என்ற கைப்பேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

**ஓம்/-**

**இயக்குநர்**

**இடம்: சென்னை-6**

**நாள்: 11.06.2026**